**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**வழக்கு எண் :OS No: 94/2020 தேதி:26.11.2024**

**வா.சா. 1 – ராமமூர்த்தி**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:** ( 1, 2 ம் பிரதிவாதிகள் தரப்பில்)

நான்குமால் என்றால் எனக்கு என்வென்று தெரியும். தாவா சொத்திற்கு நான்குமால் எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு கிழக்கே என் இடம் உள்ளது. தெற்கே யார் இடம் என்று ஞாபகம் இல்லை. 1968 ஆண்டு பிரதிவாதி கிரையம் வாங்கும்போது கிணறு இருந்ததா என்றால் இல்லை. தற்போது இருக்கிறதா என்றால் எனக்கு தெரியாது. VAO க்கு தான் தெரியும். தாவா சொத்தில் கிணறு உள்ளதா என்றால் உள்ளது. கிணறு யார் வெட்டினார்கள் என்று ஞாபகம் இல்லை. யார் பெயரில் மின்இணைப்பு உள்ளது என்று தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு அடிப்படை இல்லாததது என்றால் சரியல்ல. 1944 ஆண்டில் அதன் முன்சுவான்தாரர்கள் ஒரு பகுதியை தங்கச்சியம்மாள் என்ற வள்ளியம்மைக்கு கிரையம் செய்தார்கள் என்றால் தெரியும். அது பொய்யான ஆவணம். வழக்கு போடுவதற்கு முன்பாக தான் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 7 ஆவணம் 80 வருடங்களுக்கு முன்பான ஆவணம் என்பதால் அதனை ஆட்சேபணை செய்ய எனக்கு முகாந்திரம் கிடையாது பொய்யாக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் வா.சா.ஆ.9 ஆவணத்தின் மூலம் 1ம் பிரதிவாதிக்கு தங்கச்சியம்மாள் என்ற வள்ளியம்மை மறுகிரையம் செய்துள்ளார் என்றால் அது தவறானது. வா.சா.ஆ.8 ஆவணத்தின் மூலம் 1ம் பிரதிவாதி மீதமுள்ள சொத்தை பெரிசன்னதேவர் வகையறாவிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு வாங்கிய

மொத்த சொத்தையும் 1ம் பிரதிவாதி வங்கியில் அடமானம் வைத்து கிணறு வெட்டினார் என்றால் இருக்கலாம். அந்த கிணற்றிக்கு அவர் பெயரிலேயே மின்இணைப்பு வாங்கினார் என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு என் பெயரில் மின்கட்டணம், தீர்வை கட்டியுள்ளேனா என்றால் இல்லை. என் தாத்தாவிற்கு தான் தெரியும். தாத்தா இறந்துவிட்டார் எப்போது இறந்துவிட்டார் என்று தெரியாது. இந்த வழக்கை எந்த ஒரு ஆதாரமும் இல்லாமல் பிரதிவாதிகளிடம் பணம் பறிக்கவேண்டும் என்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மொத்த சொத்தையும் ராஜலெட்சுமி என்பவருக்கு 1ம் பிரதிவாதி அடமானம் வைத்துள்ளரா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அதை 1ம் பிரதிவாதி மீட்டு விட்டார் என்றால் ஞாபகம் இல்லை. 2ம் பிரதிவாதி சக்திதேவி என்பவர் 1ம் பிரதிவாதியின் மகள் என்றால் சரிதான். அவர் கால்நடை மருத்துவர் என்றால் சரிதான். அவருக்கு சுமார் 2 ஏக்கர் நிலத்தை 1ம் பிரதிவாதி கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். சக்திதேவி என்பவர் 2005 ஆண்டு கால்நடை மருத்துவர் படிப்பை முடித்தார் என்பது தெரியுமா என்றால் தெரியாது. 2ம் பிரதிவாதிக்கு ஆட்டுபண்ணை வைப்பதற்காகவும் அவர் அரசாங்கத்தில் மானியம் பெறுவதற்கு அவர் பெயரில் நிலம் வேண்டும் என்பதற்காகவும் 2ம் பிரதிவாதி பெயரில் 1ம் பிரதிவாதி கிரையம் செய்து கொடுத்தார் என்றால் தெரியாது. பதிவுகளை ரத்து செய்யவேண்டும் என்று தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் பழமையான ஆவணங்கள் என்பதால் என் பரிகாரம் காலவரையறை தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் மூலிகை மரம் நட்டது, வளர்த்தது 1ம் பிரதிவாதி என்றும் அதை அறுவடை செய்யும்போது நான் தகராறு செய்ததால் தான் என் மீது குற்றவழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என் பாட்டி வைத்த மரங்களை தான் 1ம்

பிரதிவாதி வெட்டிவிட்டு எங்கள் மீது பொய்யான வழக்கு போட்டார். குற்ற வழக்கு தாக்கல் செய்து 8 வருடங்களாகிவிட்டது என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு எந்த ஒரு முகாந்திரம் கிடையாது என்றும் எந்த காலத்திலும் தாவா சொத்தை அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. இன்று வரை தாவா சொத்து பிரதிவாதிகளின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றும் அவர்கள் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரியல்ல. என் தாத்தா பெயரில் பட்டா உள்ளது. எங்கள் அனுபவத்தில் உள்ளது. நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.